DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 10/2025 |
| Deposition of witness | : | P.W- 1 |
| Name | : | துர்கா |
| Father's /Husband Name | : | காத்தவராயன் |
| Village | : | பூந்தோட்டம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 42 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 13th day of March 2025.
Accused present.

<u>முதல் விசாரணை</u> :

விபத்தில் இறந்துபோன காத்தவராயன் எனது கணவர். கடந்த 12.08.2024-ம் தேதி நானும், எனது கணவரும் இருசக்கர வாகனத்தில் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு செல்வதற்காக திருவாரூர் நோக்கி முடிகொண்டான் TNCSC அருகே காலை 11.30 மணிக்கு வந்துகொண்டிருந்தோம். அப்போது எதிரில் TN 55 BU 5151 என்ற லாரி மாயவரம் நோக்கி வேகமாக வந்து சிக்னல் எதுவும் போடாமல் திரும்பி எங்கள் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் எனது கணவருக்கு தாவாங்கட்டை இரு கைகளிலும் மற்றும் கால், கழுத்தில், தலையில் காயம் ஏற்பட்டது. எனக்கு இடது பக்க தோள்பட்டை, கை கால்களில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு 27 நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனளிக்காமல் எனது கணவர் இறந்துவிட்டார். விபத்தை ஏற்படுத்திய லாரியின் ஓட்டுனர் லாரியிலிருந்து இறங்கி ஓடினார். ஆனால் அது ஆஜர் எதிரிதானா என்று சரியாக தெரியவில்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 10/2025 |
| Deposition of witness | : | P.W- 2 |
| Name | : | மாதவன் |
| Father's /Husband Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Village | : | முடிகொண்டான் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 33 |
| Occupation | : | ஓட்டுனர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 13th day of March 2025.
Accused present.

<u>முதல் விசாரணை</u> :

விபத்தில் இறந்துபோன காத்தவராயனை எனக்கு தெரியும். கடந்த 12.08.2024-ம் தேதி முடிகொண்டானிலிருந்து பூந்தோட்டம் செல்வதற்காக எனது இருசக்கர வாகனத்தில் காலை 11.30 முடிகொண்டான் TNCSC அருகே சென்றுகொண்டிருந்தேன். அப்போது திருவாரூரிலிருந்து மாயவரம் நோக்கி சென்ற லாரி திடீரென யூட்டேன் போட்டார். பூந்தோட்டத்திலிருந்த திருவாரூர் நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் மீது மோதியதில் அதில் வண்டி ஓட்டியவருக்கு தாவாங்கட்டையிலும், கைகளிலும் காயம் ஏற்பட்டது. மற்றொருவருக்கு கை கால்களில் காயம் ஏற்பட்டது. TN 55 BU 5151 என்ற லாரியை ஓட்டியவர் ஆஜர் எதிரி தான். காயம்பட்ட இருவரையும் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.